# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்


www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 146 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 23.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# சென்னையை உலகத்தரம் வாய்ந்த பெருநகராக உயர்த்துவோம்

## சென்னை தினத்தையொட்டி முதலமைச்சர் விஜய் வாழ்த்து



சென்னை: உலகத்தரம் வாய்ந்த சீர்மிகு பெருநகராக சென்னையைமேலும்உயர்த்துவோம் என்று சென்னை தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முதலமை ச்சர் விஜய் தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 22-ஆம் தேதி தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையின் பிறந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் வேலைதேடிச்செல்லும் நகரமாவும், வாழ்க்கைக்கு அச்சாரமிடும் நகரமாகவும், பல தொழிலதிபர்களை உருவாக்கிய நகரமாகவும், இளைஞர்க ளின் கனவுகளை நிறைவேற்றும் நகரமாகவும் சென்னை இருக்கின்றது என்றால் அது மிகையாது.

அந்தவகையில்இன்று சென்னை தினத்தை மக்கள் கொண்டாடி வருகின்றனர்.சென்னை தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் விஜய், சென்னை மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளப் பக்கத்தில், "வரலாற்றின் தடங்களைச் சுமந்தும், நவீனத்தின் வேகத்தோடு பயணித்து, தமிழகத்தின் வெற்றித் தலைநகராகத் திகழும் நம்சென்னையின்பெருமையைப் போற்றும் இந்நன்னாளில் அனைவருக்கும் எனது இனிய "சென்னை நாள்" நல்வாழ்த்துகள்! வரலாற்றுச் சிறப்பும், பண்பாட்டுப் பெருமையும், கல்வி, மருத்துவம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான வளர்ச்சியும், உழைப்பும், புதுமையும் சங்கமிக்கும் நகரமாக சென்னை விளங்குவதோடு, பல்வேறு மொழி, இன, பண்பாடுகளைச்சேர்ந்த மக்களைஅரவணைத்து, அனைவருக்கும்வாய்ப்புகளை வழங்கும் மாநகரமாகவும் திகழ்கிறது.

சென்னையின் வரலாற்றுப் பெருமையையும் பண்பாட்டு அடையாளங்களையும் பாதுகாத்து, நவீன உட்கட்டமைப்புகளுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த சீர்மிகு பெருநகராக சென்னையை மேலும் உயர்த்துவோம். அனைவருக்கும் சமவாய்ப்பும், பாதுகாப்பான சூழலும்,வளமான வாழ்வும் கிடைத்திட உறுதியேற்போம். வளரட்டும் சென்னைப் பெருநகரம்! உயரட்டும் மக்களின் வாழ்க்கைத்தரம்!" என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன், சென்னையின் பெருமைகளை உலகிற்கு சொல்லும்வகையிலான காணொளி காட்சியையும் பதிவிட்டுள்ளார்.

## தி.மு.க.வில் அதிரடி மாற்றங்கள்:

# "கம்பேக் கொடுப்பதில் நாம் ஸ்பெஷலிஸ்ட்.. அதை சிறப்பாக கொடுப்போம்!"

## மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பேச்சு



தேர்தலில்தான் தோல்வி அடைந்திருக்கிறோமே தவிர, நிரந்தரமாக இல்லை. கழகத்தின் எதிர்காலத்தை திட்டமிட நமக்கு கால அவகாசம் கிடைத்திருப்பதாக எடுத்துக் கொள்வோம் என்று தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தி.மு.க. செயற்குழு கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று நடைபெற்றது. கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்நடைபெற்றஇந்தக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

பின்னர் செயற்குழு கூட்டத்தில் நிர்வாகிகள் மத்தியில் திமுக தலைவரும்,முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

நாம் பார்க்காத வெற்றியும் இல்லை; நாம் பாரக்காத தோல்வியும் இல்லை.தேர்தலில்தான் தோல்வி அடைந்திருக்கிறோமே தவிர, நிரந்தரமாக இல்லை. கழகத்தின் எதிர்காலத்தை திட்டமிட நமக்கு கால அவகாசம் கிடைத்திருப்பதாக எடுத்துக் கொள்வோம்.

கழக வரலாற்றில் இது மிகமுக்கியமானசெயற்குழுவாக அமையவிருக்கிறது. உங்களின் ஒப்புதலுடன் கழகத்தின் அமைப்பு முறையில் முக்கியமான பெரிய மாறுதல்களைச் செய்யவிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் கடந்த பிறகும், கழகம் வலிமையோட இருப்பதற்கான காரணம், நம் அமைப்புமுறை தான்.

கலைவர் கலைஞரின் வரிகளை நீங்க மறந்திருக்க மாட்டீர்கள். 'இந்த கருணாநிதியின் வாழ்வு முடிந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாழ்வு முடியாது! அதனை, அதன் அமைப்புமுறை காப்பாற்றும்!'. இதுதான் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது. அப்படிப்பட்ட அந்த அமைப்பு முறையின் வலிமையாலதான், நாம் நிற்கிறோம்.

நாம் தோல்வியடைய பல காரணங்கள் இருப்பினும் நிர்வாகிகளின் செயல்பாடுகளும் ஒன்று. அதையும் நாம் மறைக்கத் தேவையில்லை. நம் தவறுகளை முதலில் நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். வெளிப்படையாக ஒத்துக் கொள்ள வேண்டும். எந்தத் தனிமனிதரின் தவறாக இருந்தாலும் - அதனால் பாதிக்கப்படுவது எழுபத்தைந்தாண்டு காலக் கழகம்.

சுய பரிசோதனை

தோல்விக்கு பிறகு, எத்தனையோ காரணங்கள் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியாக பார்த்து குறைகளைக் கண்டறிந்து ஆளைமாற்றுவதைவிட முழுமையான ஒரு சுய பரிசோதனை வேண்டும் என முடிவெடுத்தேன். அந்த வகையில் கழகத்தின் நிர்வாக அமைப்பில் பல மாறுதல்களைச் செய்யவிருக்கிறோம். கடுமையானதாகத்தான் இருக்கும்; சிலருக்கு கசப்பானதாகவும்இருக்கும். கசப்புதான் உடலுக்கு நன்மை செய்யும். அதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இந்த மாறுதல்கள் அடுத்த நூறாண்டுக்கு கழகம் உயிர்ப்போடு இருப்பதை உறுதி செய்யும்.தேர்தல்தோல்விக்கு பிறகு, 38 பேர் கொண்ட கள ஆய்வுக் குழுவை அமைத்தேன். தொகுதி வாரியாக நிர்வாகிகளிடம் கருத்துக் கேட்டு அதை அறிக்கையாக கொடுத்திருக்கிறார்கள். அது தவிர, தனியாக இணையதளம் உருவாக்கப்பட்டு அதன் மூலமும் பல்லாயிரக்கணக்கான கருத்துகள் பெறப்பட்டு, இவை அனைத்தையும் தொகுத்து நான் முழுமையாக வாசித்து உள் வாங்கியிருக்கிறேன்.

ஊருக்கே வெளிச்சம் கொடுக்கும் விளக்குக்கு, தனக்கு கீழே இருக்கும் இருட்டு தெரியாது. அப்படித்தான் நம்மிடம் இருந்த தவறுகளை கண்டறியத் தவறிவிட்டோம். இந்தக் கருத்துகளின் அடிப்படையில - திட்டங்களை வகுக்க, தங்கம்தென்னரசு அவர்கள் தலைமையில, மறுசீரமைப்புக் குழுவை அமைத்தேன்.

அந்தக்குழு அறிவாலயத்தில் பல நாள் கூடி, ஒவ்வொரு பிரச்சனையாக ஆய்வு செய்து, இடைக்கால அறிக்கையை என்னிடம் கொடுத்தார்கள். முக்கியமான தலைமை கழக நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து தீர்மானமாக உருவாக்கியுள்ளோம். இளைஞர்கள், பெண்கள் நம்பிக்கையை மீண்டும் நமக்கு பெற்றுத் தருவது போல நம் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

இனி வரும் நிர்வாகிகளுக்கு, அந்தந்த பொறுப்புகளுக்கு ஏற்ப வயது வரம்பையும், பதவிக்காலத்தையும் அறிமுகப்படுத்த போகிறோம். புதுமுகங்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் பொறுப்புகளை வழங்கப் போகிறோம். விரைவில் புதிய உறுப்பினர் சேர்க்கையை நாம் தொடங்க வேண்டும். உறுப்பினர் சேர்க்கை நேர்மையானதாக - உண்மையானதாக அமைய வேண்டும்.

படைக்கு இளையோர் வரும்போது,அவர்களை மூத்தோர் வரவேற்று வழி நடத்துவதுதான் வலுவான படைக்கு அடையாளம். இப்போது ஆட்சிக்குவந்திருப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்? மக்களுக்காக உழைக்காமல்-போராட்டம் நடத்தாமல் - கொள்கை இல்லாமல் - நிர்வாகக் கட்டமைப்பு இல்லாமல் - ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். இதை பார்த்து நாமும் அப்படி ஆக முடியாது - ஆகிடவும் கூடாது! அது போன்று நாமும் கட்சியை நடத்தலாம் என்று நினைக்கவே கூடாது. எதிர்கட்சியாக இருந்தாலும் சுணங்கிடாமல், மக்கள் நலனுக்காக சிறப்பாகச் செயல்படும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் என நம் எதிரிகளே சொல்வார்கள். Comeback கொடுப்பதில் நாம் Specialist! சிறப்பாகக் கொடுப்போம்!

கடந் முறை வென்ற பிறகு வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து நல்லாட்சி கொடுப்போம் எனச் சொன்னோம்; அதைச் செய்தும் காட்டினோம்.இப்போதுதோற்ற பிறகும் நான் சொல்கிறேன்,நமக்குவாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்துதான் போராட போகிறோம். அவர்களின் நலனுக்கும் துணைநிக்க போகிறோம்.

நம் கட்சிக்காரர்கள் முதலில் அவர்கள் வீட்டில் அரசியல் பேச வேண்டும்.நம்பிள்ளைகள், நம் உறவினர்களிடம் முதலில் பரப்புரை மேற்கொள்ள வேண்டும். நம் உறவினர்கள், அக்கம்பத்தினர் வாக்குகளை முழுமையாக வாங்க வேண்டும். இப்போதைய முதலமைச்சர் நாம் கொண்டு வந்த எல்லா திட்டங்களுக்கும் பெயர் மாற்றுவதில் பிசியாக இருக்கிறார்.

# செப்டம்பர் 1ம் தேதி முதல் புதிய தமிழ் படங்கள் ரிலீஸ் இல்லை

## திரைப்பட தயாரிப்பாளர் சங்கம் அதிரடி முடிவு




செப்டம்பர் 1-ம் தேதி முதல் புதிய தமிழ் திரைப்படங்களை திரையரங்குகளில் வெளியிடுவதில்லை என தயாரிப்பாளர் சங்கம் முடிவு செய்துள்ளது. திரைப்படத் துறையில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு தமிழக அரசு தலையிட்டு உரியதீர்வுகாணவேண்டும் என தயாரிப்பாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிகிறது.

தமிழ் திரையுலகில் நிலவி வரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக சென்னையில் தயாரிப்பாளர் சங்கம் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தயாரிப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் திரைப்படங்களின் வெளியீடு தொடர்பான விவகாரங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதன் முடிவில், வரும் செப்டம்பர் 1-ம் தேதி முதல் புதிய தமிழ் திரைப்படங்களை திரையரங்குகளில் வெளியிடுவதில்லை என தயாரிப்பாளர் சங்கம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், புதிதாக வெளியாகும் திரைப்படங்களை திரையரங்குகளில் வெளியிட்ட 8 வாரங்களுக்குப் பிறகே ஓடிடி தளங்களில் வெளியிட வேண்டும் என்ற நிபந்தனையையும் தயாரிப்பாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

திரையரங்க வெளியீட்டுக்கும்ஓடிடி வெளியீட்டுக்கும் இடையிலான கால இடைவெளி தொடர்பாக தயாரிப்பாளர்கள் மற்றும் திரையரங்க உரிமையாளர்கள் மத்தியில் தொடர்ந்து விவாதங்கள் நடைபெற்று வரும் நிலையில், இந்த முடிவு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இதுமட்டுமின்றி, வரும் செப்டம்பர் 1-ம் தேதி முதல்புதியதிரைப்படங்களின் படப்பிடிப்புகளையும் நடத்துவதில்லை என சங்கம் அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

திரைப்படத் துறையில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு தமிழக அரசு தலையிட்டு உரியதீர்வுகாணவேண்டும் என தயாரிப்பாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிகிறது.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கோவை நேரு கல்விக் குழுமம் சார்பில் பிரம்மாண்டமாக கொண்டாடப்பட்ட ஓணம் விழா



தமிழ்நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்றான நேரு கல்விக் குழுமம் சார்பில், கேரளத்தின் பாரம்பரியத்தையும் கலாச்சாரச் சிறப்பையும் போற்றும் வகையில், அதன் 16 நிறுவனங்களிலும் ஓணம் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் 10,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்று, ஓணத்தின் பாரம்பரிய பெருமையையும் மகிழ்ச்சியையும் கொண்டாடினர்.

மாவேலி மன்னனின் பாரம்பரிய வரவேற்புடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. உற்சாகமூட்டும்சிங்காரிமேளத்தின் தாள இசையுடன் மாவேலியின் வருகை சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களின் கலைத்திறனையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட வண்ணமயமான பூக்களம் விழாவின் முக்கிய ஈர்ப்பாக அமைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற புலிக்களி, மோகினியாட்டம், கதகளி மற்றும் திருவாதிரை உள்ளிட்ட பாரம்பரியகலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன. வண்ணமயமான ஆடை அலங்காரங்கள், சிறப்பான முகபாவனைகள் மற்றும் தாளத்திற்கேற்ப அமைந்த நடன அசைவுகள் மூலம் கேரளத்தின் செழுமையான கலை மற்றும் கலாச்சார பாரம்பரியம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டது. விழாவின் மற்றொரு முக்கிய அம்சமாக பாரம்பரிய ஓண விருந்து அமைந்தது. வாழை இலையில் பரிமாறப்பட்ட பல்வேறு சைவ உணவு வகைகள் அடங்கிய பாரம்பரிய ஓண விருந்துமாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து மகிழ்ச்சியுடன் சுவைத்தனர். விழா முழுவதும் நடைபெற்ற சிங்காரி மேளத்தின் தாள இசை, பண்டிகை உற்சாகத்தை மேலும் அதிகரித்தது. பாரம்பரிய இசைக்கருவிகளின் தாளத்துக்கு மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் உற்சாகமாகப் பங்கேற்றதுடன், நிகழ்ச்சிகள் பெரும் வரவேற்பையும் கைதட்டல்களையும் பெற்றன.



கோவையில் பிரபல ஹோட்டலில் நடைபெற்ற மாபெரும் விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட விஜய் டிவி புகழ் நடிகர் அமுதவாணன் கலந்து கொண்டார் இதில் பல்வேறு துறையில் சாதித்வர்களை பாராட்டி வாகை விருதுகள் வழங்கப்பட்டது இதில் திருப்பூர் மாவட்ட தாராபுரத்தை சேர்ந்த சமூக சேவகரும் தமிழக வெற்றி கழக நிர்வாகியுமான ரஜினிகுமார் அவர்களுக்கு மக்கள் தளபதி விருது வழங்கப்பட்டது அவர் இதற்கு முன்பு அண்ணல் அம்பேத்கர்,சமூகசேவகர்,சேவைசெம்மல்,மக்கள்சேவகன்,போன்றவிருதுகளைபெற்றுள்ளார்என்பதுகுறிப்பிடத்தக்கது

# சோளிங்கர் பத்மாபுரம் பெருமாள் கோவிலை புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் - அர்ஜூன் சம்பத் வலியுறுத்தல்



:இந்து மக்கள் கட்சி தமிழகம் சார்பில் சோளிங்கர் பேருந்து நிலையம் அருகே நடைபெற இருந்த ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்திற்கு சோளிங்கர் காவல்துறை அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து, போராட்டத்திற்கான மறு தேதி பின்னர் அறிவிக்கப்படும் என இந்து மக்கள் கட்சி தமிழகம் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, இன்று காலை சுமார் 10 மணியளவில் இந்து மக்கள் கட்சி தமிழகம் சார்பில் சோளிங்கர் லட்சுமி நரசிம்ம சுவாமி கோவிலுக்கு சொந்தமான பத்மாபுரம் கிராமத்தில் அமைந்துள்ள பழமையான பெருமாள் கோவிலை பார்வையிட்டனர்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அர்ஜுன் சம்பத், ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கூறப்படும் இக்கோவிலை மீண்டும் பொதுமக்களின் வழிபாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கோவிலை புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், சோளிங்கர் லட்சுமி நரசிம்ம சுவாமி கோவிலின் வருவாயிலிருந்து பத்மாபுரம் பெருமாள் கோவிலைப் புதுப்பிக்கநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்றும், கோவிலுக்குச் சொந்தமானசொத்துகளைமீட்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் மற்றும் துறை சார்ந்த உயர் அதிகாரிகள் பத்மாபுரம் பெருமாள் கோவிலை நேரில் பார்வையிட்டு, கோவிலின் தற்போதைய நிலையை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அர்ஜுன் சம்பத் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்வில் மாநில செயலாளர் ஜே. கண்ணன், வேலூர் கோட்டத் தலைவர் எஸ்.கே. மோகன், ஆன்மீகப் பிரிவு மாவட்டத் தலைவர் ஸ்ரீதர், மாவட்டப் பொருளாளர் சம்பத், ஆன்மீகப் பிரிவு மாவட்டத் தலைவர் ஆஞ்சநேயர், இளைஞரணி மாவட்டத் தலைவர் அஜய்குமார், மாவட்டச் செயலாளர் பார்த்திபன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மேலும், ஒன்றிய பொறுப்பாளர்கள் குமார், அன்பழகன், மணிவண்ணன், பிரபாகரன், அன்பு, பாஸ்கர், ரவி, சின்னப்பா, நரசிம்மன், முருகன் உள்ளிட்டோரும், மகளிரணி தலைவர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் பத்மாபுரம் கிராம பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் தலைமையில்

# செயற்கை நுண்ணறிவு (AI) கருவிகளை பயன்படுத்துவது குறித்த ஒரு நாள் பயிலரங்கம் நடைபெற்றது



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார் தலைமையில், அன்றாட நிர்வாகப் பணிகளில் செயற்கை நுண்ணறிவு (AI) கருவிகளைப் பயன்படுத்தி பணித் திறனை மேம்படுத்துவது தொடர்பான ஒருநாள் பயிலரங்கம் நேற்று (22.08.2026) நடைபெற்றது.

இப்பயிலரங்கில். தேசிய தகவலியல் மையத்தின் (NIC) இணை இயக்குநர் எஸ்.செந்தில்குமார் , நிர்வாகப் பணிகளில் Microsoft Copilot உள்ளிட்ட செயற்கை நுண்ணறிவு கருவிகளைப் பயன்படுத்தி பணித் திறனை மேம்படுத்தும் வழிமுறைகள் குறித்து விளக்கினார். மேலும்,தமிழ்நாடு மின்-ஆளுமை முகமையின் துறை மூத்த கட்டமைப்பாளர் முனைவர் கே. சங்கீதா அவர்கள், செயற்கை நுண்ணறிவின் தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் AI கருவிகளை நெறிமுறையுடன், பொறுப்புணர்வுடன் பயன்படுத்துவதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

இப்பயிலரங்கின் ஒரு பகுதியாக, பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கழகம் (தன்னாட்சி), ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி), அரசு பொறியியல் கல்லூரி, சித்தோடு மற்றும் நந்தா பொறியியல் கல்லூரி (தன்னாட்சி) ஆகிய கல்வி நிறுவனங்களைச் சார்ந்த பேராசிரியர்கள், செயற்கை நுண்ணறிவு கருவிகளின் நடைமுறைப் பயன்பாடுகள் குறித்து செயல்விளக்கம் அளித்தனர். இதில், தரவு பகுப்பாய்வு, அதிகாரப்பூர்வ உள்ளடக்க உருவாக்கம், கூட்ட மன்றக் குறிப்புகள் தயாரித்தல், ஆவணங்களைப் பகுப்பாய்வு செய்தல், ஆவண அறிவுத்திறன் மற்றும் கோப்புத் தயாரிப்பு உள்ளிட்ட அன்றாட நிர்வாகப் பணிகளில் AI கருவிகளைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து செயல்விளக்கங்களுடன் பயிற்சி வழங்கப்பட்டது. அரசுத் துறைகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பணித் திறனை மேம்படுத்தவும். நேரத்தைச் சேமிக்கவும், ஆவணத் தயாரிப்பு மற்றும் தரவு சார்ந்த பணிகளை விரைவாகவும் திறம்படவும் மேற்கொள்ளவும் செயற்கை நுண்ணறிவு கருவிகளை பொறுப்புடன் பயன்படுத்துவதற்கான அறிவை வழங்குவதே இப்பயிலரங்கின் முக்கிய நோக்கமாகும். இன்றைய தினம் நடைபெற்ற பயிலரங்கில் 500-க்கும் மேற்பட்ட அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிலரங்கில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வி.தேன்மொழி, மாவட்ட தகவலியல் அலுவலர் (DIO) J.V.S.ஜெகன், தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை, ஈரோடு மின்-மாவட்ட மேலாளர் ஜெ.கோகிலவாணி உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# வரும் செப்டம்பர் 5ம் தேதி வ. உ. சி. பிறந்தநாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த ஆலோசனை கூட்டம்

## கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள செல்லாண்டியம்மன் கோயிலில் நடைபெற்றது



வரும்செப்டம்பர் 5ஆம் தேதி, வ.உ.சிதம்பரம் பிள்ளையின் பிறந்தநாள் விழாவுக்கான ஆலோசனை கூட்டம் கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள, சேரகுல வேளாளர் சமுதாயத்திற்கு பாத்தியபட்ட அருள்மிகு ஸ்ரீ செல்லாண்டியம்மன் கோயிலில் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் வாயிலாக, வருகின்ற செப்டம்பர் 5ஆம் தேதி வ உ சிதம்பரம் பிள்ளையின்,பிறந்தநாள் விழாவினை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த நிகழ்ச்சியானது வடவள்ளி திருவாளர்கள் வேளாளர் பிள்ளை அறக்கட்டளையின் சார்பிலும், வடவள்ளி வேளாளர் பிள்ளை நல சங்கத்தின் சார்பிலும், நடைபெற்றது தொடர்ந்து அமைப்பின் நிர்வாக குழுவும், பொது குழு கூட்டமும் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் வாயிலாக, கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரம் பிள்ளையின் பிறந்தநாளை கோவை வ உ சி பூங்காவில், சீரும் சிறப்புமாக நடத்த வேண்டும், செப்டம்பர் 5ம்தேதியன்று நடைபெறுகின்ற விழாவில், கோவையில் உள்ள, அனைத்து அமைப்புகளையும் அரவணைத்து வ உ சி சிலைக்கு மாலை அணிவிக்க வருபவர்களுக்கு அனைவருக்கும் அன்னதானம் வழங்குவது என முடிவு செய்யபட்டு, சிறப்பு தீர்மானம் நிறைவேற்ற பட்டது மேலும், வடவள்ளி பேருந்து நிலையத்தில்வ.உ.சியின் திருஉருவ படம் அமைத்து,

அத்திருவருவபடத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செய்ய வேண்டும், இதில் சுமார் 200 பேர்கள் கலந்து கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனை கூட்டத்தில்

கோவை மாவட்ட ஒருங்கிணைந்த வேளாளர் வெள்ளாளர் பேரீக்கத்தின் எம். பி, ராஜ்குமார் சோழன் பிள்ளை, அகில இந்திய வேளாளர் வெள்ளாளர் பேரவை நிறுவனத் தலைவர் கே ஆர்சிவதேசிகன்வேளாளர் பிள்ளை, மற்றும் கோவை மாவட்ட ஒருங்கிணைந்த வேளாளர் வெள்ளாளர் பேரிக்கத்தின் அங்க வகித்துள்ள அனைத்து அமைப்பினர்,

மற்றும் மாவட்ட தலைவர் லோகநாதன் பிள்ளை, செயலாளர் S.கதிரவன் பிள்ளை, பொருளாளர் சிவக்குமார் பிள்ளை, துணைத்தலைவர்வெங்கடசாமி பிள்ளை,துணை செயலாளர் நடராஜ் பிள்ளை, மேலும் கௌரவ தலைவர் ஜெகநாதன் பிள்ளை, கௌரவ ஆலோசகர் வெள்ளிங்கிரி பிள்ளை மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள், இளைஞர் பெருமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மேலும் வடவள்ளியில் 200பேரைவைத்து சுமார், 1000பேருக்கு அன்னதானம் வழங்குவது என முடிவு செய்யபட்டது.

# திருவள்ளூர் கௌடி மேல்நிலைப்பள்ளி மற்றும் டி.ஆர்.பி.சி.சி. பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு இடையிலான மாவட்ட அளவிலான கலைத்திருவிழா

## கலெக்டர் கவிதா தொடங்கி வைத்தார்



அரசு உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு இடையிலான மாவட்ட அளவிலான கலைத்திருவிழா திருவள்ளூர் கௌடி மேல்நிலைப்பள்ளி மற்றும் டி.ஆர்.பி.சி.சிபள்ளியில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மதிப்புமிகு ச.கவிதா அவர்கள் குத்து விளக்குஏற்றிதொடங்கி வைத்தார் நிகழ்ச்சிக்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் மதிப்புமிகு ஆர்.அறிவழகன் அவர்கள் தலைமை தாங்கினார் மாவட்டக் கல்வி அலுவலர்கள் மதிப்புமிகு அமுதா அவர்கள் , மதிப்புமிகு பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலை வகித்தனர் முன்னதாக மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிகள் கூடுதல் அலுவலர் மதிப்புமிகு பரமேஸ்வரி அனைவரையும் வரவேற்றார் நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா. அருணன் அவர்கள், தமிழ்நாடு முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநிலத் தலைவர் முனைவர் சே.பிரபாகரன் அவர்கள், திருவள்ளூர் வட்டாட்சியர் மதிப்புமிகு சரண்யா அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் ( பள்ளிக்கல்வித்துறை ) பவானி அவர்கள் டி.ஆர்.பி.சி.சி தலைமையாசிரியர் ராம்மோகன் அவர்கள் வட்டார வள மைய மேற்பார்வையாளர் மீகாவேல் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டு உரையாற்றினர் நூற்றுக்க ணக்கான மாணவ மாணவிகள் போட்டியில் கலந்துக்கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி அசத்தினர் முடிவில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அமிர்தா நன்றி தெரிவித்தார்



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், கால்நடைத்துறை அமைச்சர் செ.கமலி ஆகியோர் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அரியப்பம்பாளையம், பெரியூர் பகுதியில் நேற்று (22.08.2026) நடைபெற்ற சிறப்பு சுகாதார விழிப்புணர்வு முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி. தமிழ்ச்செல்வி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கால்நடைத்துறை அமைச்சர்செ.கமலிஆகியோர்ஈரோடுமாவட்டம்,சத்தியமங்கலம்,அரியப்பம்பாளையம்பெரியூர்பகுதியில்நடைபெற்ற சிறப்புசுகாதாரவிழிப்புணர்வுமுகாமினைநேற்று(22.08.2026)துவக்கிவைத்து,கால்நடைகளுக்குஸ்கேன்பரிசோதனை செய்வதை பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.தமிழ்ச்செல்வி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கால்நடைத்துறை அமைச்சர்செ.கமலிஆகியோர்ஈரோடுமாவட்டம்,சத்தியமங்கலம்,அரியப்பம்பாளையம்பெரியூர்பகுதியில்நடைபெற்ற கால்நடைகளுக்கானசிறப்புசுகாதாரவிழிப்புணர்வுமுகாமினைநேற்று(22.08.2026)துவக்கிவைத்து,பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.தமிழ்ச்செல்வி உட்பட பலர் உள்ளனர்.


# பணம் கொடுத்தால் தான் வேலை என்ற பேச்சுக்கே இனி இடம் இல்லை அமைச்சர் ஆனந்த் பேச்சு



திருச்சி மாவட்டம், மணப்பாறை அருகே உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர் சங்கத்தின் 2-ம் மாநில மாநாட்டின் பொதுமாநாடு நடைபெற்றது.இதில் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த் கலந்து கொண்டு பேசியதாவது:-உலகத்திலேயே தூய்மை பணியாளர்கள் போல் சேவை செய்திட யாரும் இல்லை. யாரும் இருக்க மாட்டார்கள். கைதட்டுவதற்காக இதை சொல்லவில்லை. தூய்மை பணியாளர்களுக்கு கடந்த காலத்தில் நலத்திட்டங்களை செய்திட ஏன் மனசு வரவில்லை என்று தெரியவில்லை. ஆனால் இப்போது முதல்-அமைச்சர் விஜய் அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலிப்பார். தலைவர் முகத்துக்காகத்தான் அனைத்து மக்களும் ஓட்டு போட தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லி இன்று வெற்றி பெற்று இருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஒரு போதும் தவறு செய்ய மாட்டோம் என்று திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏழை மக்கள் மீது எப்போதும் பரிவு காட்டும் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி. தொழிலாளர்களுக்காக போராடும் கட்சி. எளிமையானவர்கள் நிறைந்தகட்சி.இதேபோல் தமிழக வெற்றிக் கழகமும் ஏழை எளிய மக்களுக்கான கட்சிதான். இனிமேல் கம்யூனிஸ்ட் கட்சிகள் போராட வேண்டிய அவசியம் இருக்காது. அது கடந்த ஆட்சி காலம். இப்போதுள்ள முதல்வர் ஏழை மக்களுக்கானவர். கம்யூனிஸ்ட் கட்சி என்றாலே போராட்டம் தான் என்பார்கள். ஆனால் இனி அப்படியான நிலை இருக்காது. தூய்மை பணியாளர்கள் தங்களின் நிலையை சொல்லும் போதே கஷ்டமாக இருந்தது. அனைவருக்கும் சொல்கிறேன். உங்கள் முதல்வர் உங்களை கண்டிப்பாக கைவிட மாட்டார். லஞ்சம் பெறாமல் இருந்தாலே செழிப்பாக இருப்போம். இனி லஞ்சமே இருக்காது. இவ்வாறு அவர் பேசினார்.

# ஈரோடு வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் குறைந்தது; விவசாயிகள் கவலை



ஈரோடு மாவட்டம் அந்தியூர் அருகே பர்கூர் மலை அடிவாரத்தில் வரட்டுப்பள்ளம் அணை அமைந்துள்ளது. 33.46 அடி நீர்மட்டம் உயரம் கொண்ட இந்த அணைக்கு பர்கூர் மலைப்பகுதியே நீர்ப்பிடிப்பு பகுதியாக உள்ளது. வரட்டுப்பள்ளம் அணை நிரம்பும்போது அதன் உபரி தண்ணீர் கெட்டி சமுத்திரம் ஏரி,அந்தியூர் பெரிய ஏரி, சந்தியபாளையம் ஏரி, வேம்பத்தி ஏரி,ஆப்பக்கூடல்ஏரிக்கு செல்லும். இதன் மூலம் ஏராளமான விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் நிலத்தடி நீர்மட்டம் உயர காரணமாக அமைந்துள்ளது.

இது தவிர வரட்டுப்பள்ளம் வனப்பகுதியில் உள்ள விலங்குகளும் வரட்டுப்பள்ளம் அணைப்பகுதிக்கு வந்தே தண்ணீர் குடித்து செல்லும். இந்தநிலையில் இந்த ஆண்டு பர்கூர் மலைப்பகுதியில் மழை பெய்யவில்லை. இதனால் வரட்டுப்பள்ளம் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. 33.46அடி உயரம்கொண்டஅணையின் நீர்மட்டம் தற்போது 14.96 அடியே உள்ளது. பருவமழை பெய்யுமா? வரட்டுப்பள்ளம் அணைக்கு தண்ணீர் வருமா? என்று விவசாயிகள் ஏக்கத்தில் உள்ளனர்.

# ஆட்சி நடத்த கம்யூனிஸ்டுகள் வேண்டுமா? அதிகாரிகள் வேண்டுமா? முதலமைச்சர் விஜய்க்கு சண்முகம் கேள்வி



அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தப் போகிறீர்களா? அல்லது கம்யூனிஸ்டுகளை வைத்துக்கொண்டு ஆட்சியை தொடரப் போகிறீர்களா? என முதல்-அமைச்சர் விஜய்க்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ. சண்முகம் கேள்வி எழுப்பி உள்ளார்.

சமீபத்தில் குஜிலியம்பாறை வட்டாட்சியர் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்தவர்களை தகவல்களை திரட்டக்கோரி சுற்றறிக்கை அனுப்பியது அரசியல் வட்டாரத்தில் மிகப்பெரிய அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து மாணவர்களின் போராட்டங்களை ஒடுக்கும் விதமாகவும் அறிவிப்பு வெளியானது கடுமையான எதிர்ப்புகளை கிளப்பியது. அதன்பின்னர் இந்த இரண்டு அறிவிப்புகளும் திருப்பி பெறப்பட்டது.

இந்நிலையில் இந்த விவகாரங்களில் சம்பந்தப்பட்ட குஜிலியம்பாறை வட்டாட்சியர் மற்றும் தலைமை செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென சைதாப்பேட்டையில் சிபிஎம் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையில் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சண்முகம், சிபிஎம் சார்பில் இன்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இடதுசாரி மாணவர்களின் போராட்டங்களை ஒடுக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் தலைமை செயலாளர் உத்தரவின் அடிப்படையில் அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி இருப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியது. தலைமை செயலாளர் தலைமையிலான கூட்டத்தின் அடிப்படையில் தான் கல்லூரி கல்வி ஆணையர் இத்தகையை சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். இந்த ஜனநாயக நாட்டில் இப்படி ஒரு சம்பவம் அனேகமாக எங்குமே நடந்தது இல்லை.

ஆகவே தமிழ்நாடு தலைமை செயலாளரின் இந்த செயல்பாடு சட்ட விரோதமானது. வன்மையான கண்டனத்துக்கு உரியது. அவர் தலைமை செயலாளராக நீடிப்பதற்கு தகுதி இல்லாதவர். உடனடியான அவர் பதவில் இருந்து அகற்றப்பட வேண்டியவர். சட்டமன்றத்தில் இந்த விவகாரம் தொடர்பாக நடந்த விவாதத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்த கருத்து கொஞ்சமும் ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல.தவறுதலாகநடந்துள்ளதாக அவர் பேசியுள்ளது ஏற்கத்தக்கது இல்லை.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு அரசுக்கும், முதல்-அமைச்சருக்கும் உண்டு அதோடு தலைமை செயலாளர் பதவி நீட்டில் தான் உள்ளார். எனவே அவரை பொறுப்பில் இருந்து நீக்கி, திறமை வாய்ந்த அதிகாரியை பணியில் அமர்த்த வேண்டும்.

அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தப் போகிறீர்களா? அல்லது கம்யூனிஸ்டுகளை வைத்துக்கொண்டு ஆட்சியை தொடரப் போகிறீர்களா? என கேள்வி எழுப்பினார்.

# கூடலூர் அருகே ஓவேலியில் புலி தாக்கி மேலும் ஒருவர் உயிரிழப்பு



கூடலூர்: கூடலூர் அருகே மேலும் ஒருவரை புலி அடித்துக் கொன்றதால் ஆவேசமடைந்த கிராம மக்கள், வனத்துறையை கண்டித்து நேற்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் யானை, புலி உள்ளிட்ட வன விலங்குகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கடந்த 9-ம் தேதி ஓவேலி பகுதிக்கு உட்பட்ட லாரெஸ்டன் நம்பர் 4 என்ற இடத்தில் பாலகிருஷ்ணன் என்பவரை புலி அடித்துக்கொன்றது.

வனத்துறையினர் 16 இடங்களில் கேமராக்களை வைத்து தினந்தோறும் கண்காணித்து வந்தனர். நேற்று காலை கூடலூர் வன அலுவலர் தேவராஜ் சம்பவ இடத்துக்கு சென்று கேமராக்களை ஆய்வு செய்தபோது புலியின் நடமாட்டம் எந்த கேமராவிலும் பதிவாகவில்லை. மதியம் ஓவேலியை சேர்ந்த ரவிச்சந்திரன்(51)என்பவர்தனது தோட்டத்தில் விவசாய பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அந்தப் பகுதிக்கு வந்த புலி அவரை தாக்கி புதருக்குள் இழுத்துச் சென்று கொன்றுள்ளது.

புலியின் உறுமல் மற்றும் ரவியின் அலறல் சத்தம் கேட்ட ஓவேலி ஊராட்சி ஊழியர்கள் உடனடியாக வனத்துறைக்குதகவல்தெரிவித்தனர். வனத்துறையினர் வந்து ரவிச்சந்திரனின் சிதைந்த உடலை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது, அங்கு திரண்ட பொதுமக்கள், புலியை கூண்டு வைத்து பிடிக்க நடவடிக்கை எடுக்காத வனத்துறையை கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்டனர். பொதுமக்கள் கூறும்போது, அடுத்து இந்த புலி யாரை வேண்டுமானாலும் கொல்லலாம் என வனத்துறையிடம் தெரிவித்துவந்தோம்.

புலியை ட்ரோன் கேமராக்கள் மூலம் வேடிக்கை மட்டுமே பார்த்து வருகிறார்கள். குழந்தைகளை வைத்துக் கொண்டு இங்கு எப்படி நாங்கள் வாழ முடியும்" என்றனர். கூடலூர் வன அலுவலர் தேவராஜ், டிஎஸ்பி கோபாலகிருஷ்ணன், ஓவேலி வனச்சரகர் கருப்பு மற்றும் அதிகாரிகள் அங்கு சென்று பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

# ஓணம் கொண்டாட்டம் எதிரொலி: கேரளாவுக்கு செல்லும் விமானங்களில் கட்டணம் பல மடங்கு உயர்வு



சென்னை: ஓணம் பண்டிகையை முன்னிட்டு சென்னை விமான நிலையத்தில் இருந்து கேரள மாநிலத்திற்கு செல்லும் விமான கட்டணங்கள் பலமடங்கு உயர்ந்துள்ளது.

ஓணம் பண்டிகையின் முக்கிய நாளான திருவோணம் வரும் 26 ஆம் தேதிபுதன்கிழமைகேரள மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுவது போல கேரள மாநிலத்தவர்களுக்கு ஓணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகை ஆகும். இந்த ஓணம் பண்டிகையை கேரள மாநிலத்தவர் அனைவரும் தங்கள் சொந்த ஊர்களில் குடும்பத்தினர், உறவினர்களுடன் கூடி மகிழ்ச்சியாக கொண்டாடுவது வழக்கம். இதனையொட்டி வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் கேரள மாநிலத்தவர்கள், சொந்த ஊர்களுக்கு ஓணம் பண்டிகை கொண்டாட்டங்களுக்கு சில தினங்களுக்கு முன்னதாகவே சென்றுவிடுவது வழக்கம்.


அந்த வகையில், வரும் 26 ஆம் தேதி ஓணம் பண்டிகையை சொந்த ஊர்களில் கொண்டாடுவதற்கு சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள கேரள மாநிலத்தவர்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு செல்ல தொடங்கியுள்ளனர். இதற்காக சிறப்பு ரயில்கள், பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்த சூழலில் ரயில், பேருந்துகளில் செல்லும் போது பயண நேரம் அதிகமாகும் என்பதால் பலர் விமானங்களில் கேரள மாநிலம் செல்லத் துவங்கியுள்ளனர்.

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களோடு சேர்த்து ஓணம் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவதற்கு இன்று சனிக்கிழமை முதல் சென்னை விமான நிலையத்தில் இருந்து கொச்சி, திருவனந்தபுரம், கோழிக்கோடு, கண்ணூர் ஆகிய இடங்களுக்கு விமான பயணங்களை மேற்கொண்டுள்ளனர். அதன்படி, கேரள மாநிலத்தவர் அதிகமானோர் விமானங்களில் சொந்த ஊர் திரும்புவதால், சென்னையில் இருந்து கேரள மாநிலத்தின் முக்கிய நகரங்களுக்கு செல்லும் விமானங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது.

இதன் காரணமாக சென்னை விமான நிலையத்தில் இருந்து கேரள மாநிலத்திற்கு விமான கட்டணம் பல மடங்கு உயர்ந்துள்ளது. சென்னை, - கொச்சி விமான கட்டணம் வழக்கமாக ரூ.5,336–ஆக இருக்கும் நிலையில், இன்று கட்டணம் ரூ.14,843–ஆக உயர்ந்துள்ளது. அதே போல் சென்னை - திருவனந்தபுரம் விமான கட்டணம் ரூ.5,853–ஆக இருக்கும் நிலையில், கட்டணம் ரூ.14,700–ஆக உயர்ந்துள்ளது. சென்னை - கோழிக்கோடு விமான கட்டணம் ரூ.6,158–ஆக இருக்கும் நிலையில், இன்று கட்டணம் ரூ.17,678–ஆக உயர்ந்துள்ளது.

சென்னை - கண்ணூர் விமான கட்டணம் ரூ.5,655–ஆக இருந்த நிலையில், கட்டணம் ரூ.12,270–ஆக உயர்ந்துள்ளது. அதே போல் கண்ணூருக்கு கொச்சி வழியாக செல்வதற்கு கட்டணம் ரூ.21,694–ஆக உள்ளது. இவ்வாறு பல மடங்கு விமான டிக்கெட் கட்டணங்கள் அதிகரித்துள்ளதால் பயணிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# பள்ளிக்கல்வித்துறைக்கு புதிய திட்டங்கள் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தகவல்




சென்னை: பள்ளிக்கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை அரசு அறிவிக்கவுள்ளதாக சட்டப்பேரவை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சென்னை சேத்துப்பட்டில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்ற புற்றுநோய் குறித்தகருத்தரங்கு மற்றும் கண்காட்சியைத் தொடங்கி வைத்துபேசிய சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், "தமிழ்நாடு சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரலையில் ஒளிபரப்பப்பட்டு வருவது, சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் எப்படி இருக்கிறது என்பதை மக்கள் தெரிந்துக் கொள்வதற்காகவும், எம்எல்ஏக்கள் மக்கள் சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவும் தான்.

தமிழ்நாடு அரசின் நிதிநிலையை ஆராய்ந்து முதலமைச்சர் விஜய், பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார். பள்ளிக்கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை அரசு அறிவிக்கவுள்ளது. தமிழ்நாடு அரசுக்கு பொதுமக்கள் துணையாக நிற்க வேண்டும்; சிறிது கால அவகாசம் கொடுத்தால் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படும். 21 அதிமுக எம்எல்ஏக்கள் மீதான தகுதி நீக்க நடவடிக்கையை சபாநாயகர் கைவிட்டது சரியான முடிவுதான் என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ள உத்தரவை தலை வணங்கி வரவேற்கிறேன்.

தமிழ்நாடு சட்டப்பேரவை அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்ட விவரங்களை எந்த வடிவத்திலும் பயன்படுத்தக்கூடாது; அவ்வாறு பயன்படுத்துவது பேரவையின் மாண்புக்கு எதிரான செயல். தமிழக வெற்றிக்கழகம் வெளிப்படையான அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள் விரும்பிய அரசாக உள்ளது. மாற்றத்தைக் கொண்டு வருவது மிகவும் சிரமமான வேலை. அதனால்தான் முதலமைச்சர் விஜய், எனக்கு கொஞ்சம் அவகாசம் தாருங்கள் எனக் கேட்டிருந்தார்.

சட்டியில் ஒன்றுமில்லை எனத் தெரிந்துவிட்டது; கடனில் இருக்கிறோம் என்பது தெரிந்துவிட்டது. ஆனாலும் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும், மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என முதலமைச்சர் விஜய் நினைக்கிறார். எதிர்காலத்தில் பிரகாசமாக இருக்கக்கூடிய தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்பதற்காக பள்ளிக்கல்வித்துறையில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறார். மாணவர்களுக்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற உள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார்.

21 அதிமுக எம்எல்ஏக்கள் தொடர்பான வழக்கு குறித்து நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவில், கட்சி மாறி வாக்களித்த எம்எல்ஏக்கள் 15 நாட்களுக்குள் மன்னிப்புக் கோரியதை அக்கட்சியின் பொதுச்செயலாளர் சட்டப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கட்சிக்குள் நடைபெறும் இந்த நிகழ்வு குறித்து வெளியில் உள்ள மூன்றாவது நபர் கேள்வி எழுப்ப முடியாது என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. பொதுச்செயலாளரின் கடிதத்தை ஏற்று பேரவைத் தலைவரும், அந்த எம்எல்ஏக்கள் மீதான தகுதி நீக்க நடவடிக்கையை கைவிட்டுள்ளார்.

இதில் எந்த தவறும் இல்லை. எனவே, தவெகவுக்கு ஆதரவாக செயல்பட்ட 21 அதிமுக எம்எல்ஏக்களுக்கு எதிரான தகுதி நீக்க நடவடிக்கையை கைவிடுவது என சட்டப்பேரவைத் தலைவர் எடுத்த முடிவு சரியானதுதான் எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# காணாமல் போன பூனை: கண்டுபிடித்து தருபவருக்கு ரூ.50 ஆயிரம் சன்மானம் அறிவித்த குடும்பத்தினர்





ஈரோட்டில் காணாமல் போன பூனையை கண்டுபிடித்து தருபவருக்கு ரூ.50 ஆயிரம் சன்மானம் வழங்குவதாக குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

ஈரோடு கொல்லம்பாளையம்பகுதியைசேர்ந்தவர் ஜான் லாசர். இவருடைய மகள் ஆருத்ரா. இவர் கர்நாடகா மாநிலம் பெங்களூருவில் உள்ள கல்லூரியில் படித்து வருகிறார்.

ஆருத்ரா செர்பியன் இன பூனை ஒன்றை வளர்த்துள்ளார். அந்த பூனையின் பெயர் ரோச்.

திடீரென காணவில்லை

சமீபத்தில் ஆருத்ரா ஈரோடு வந்துள்ளார். அப்போது அவருடைய செல்லபிராணி பூனையையும் உடன் கொண்டு வந்ததாககூறப்படுகிறது. இந்த நிலையில் வீட்டில் இருந்த பூனை திடீரென காணாமல் போனது.

இதைத்தொடர்ந்து பூனையை பல்வேறு பகுதிகளில் தேடிப் பார்த்தனர். ஆனால் பூனை கிடைக்கவில்லை. இதனால் ஆருத்ரா மனமுடைந்தார்.

ரூ.50 ஆயிரம் சன்மானம்

இதையடுத்து ஜான் லாசர் சமூக வலைதளங்களில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு உள்ளார். அதில், 'உரிமையாளர் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் தனது அன்பான பூனைக்காக ஏங்கி கொண்டிருக்கிறார். எனவே தயவுசெய்து பூனையை கண்டுபிடிக்க உதவுங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பூனையை கண்டுபிடிக்க உதவுபவர்களுக்கு ரூ.50 ஆயிரம் சன்மானம் அளிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# சமூக வலைதள மோதல்களுக்கு மதுரை ஐகோர்ட்டு கண்டனம்



சமூக வலைதளங்களில் தனிநபர்களுக்கிடையே அல்லது இரு தரப்பினரிடையே நடக்கும் ஈகோ சண்டைகளையும், பரஸ்பர அவதூறுகளையும் கண்காணித்துக்கொண்டிருப்பது போலீசாரின் பணி அல்ல என்று மதுரை ஐகோர்ட்டு அமர்வுஅதிருப்திவெளியிட்டுள்ளது.

பாஜகநிர்வாகி ஒருவர், சமூக வலைதள பக்கத்தில் இஸ்லாமிய சமூகத்தினரைத் புண்படுத்தும் வகையிலும், அவதூறான முறையிலும் கருத்துகளைப் பதிவிட்டதாகக் கூறி அவர் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்திருந்தனர். அந்தஎப்.ஐ.ஆர் நடவடிக்கையை எதிர்த்தும், தன்மீதானவழக்கை முழுமையாக ரத்து செய்யக் கோரியும் அந்த பாஜக நிர்வாகி மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு நீதிபதியின் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் மற்றும் எதிர் தரப்பினரின் சமூக வலைதள செயல்பாடுகளைக் கவனித்த நீதிபதி, இரு தரப்பினரின் போக்கிற்கும் கடும் கண்டனம் தெரிவித்தார்.

விசாரணையின் போது நீதிபதி எழுப்பிய முக்கிய கேள்விகள் மற்றும் கருத்துகள்:-

சமூக வலைதளங்களிலேயே எப்போதும் ஒருவர் மாற்றி ஒருவர் மோதிக்கொண்டும், சண்டை போட்டுக் கொண்டும் இருக்கிறார்களே தவிர, இரு தரப்பினருக்கும் வேறு உருப்படியான வேலைகள் எதுவுமே இல்லையா? என்றும் பேஸ்புக், எக்ஸ் போன்ற சமூக வலைதளங்களில் தனிப்பட்ட முறையில் நடக்கும் சண்டைகளையும், விவாதங்களையும் பின்தொடர்ந்து கண்காணிப்பது போலீசாரின் முதன்மை வேலை கிடையாது எனவும் கேள்விகள் கேட்கப்பட்டது. ஒரு தரப்பினர் தவறான அல்லது அவதூறான பதிவை வெளியிட்டால், அதற்குப் போட்டியாக மற்றொரு தரப்பினரும் சமூக வலைதளத்திலேயே அவதூறுகளைப் பரப்புவது சட்டத்திற்குப் புறம்பானது மற்றும் தவறான அணுகுமுறையாகும். நீதிமன்றம் காட்டிய சட்ட வழிமுறைசமூக வலைதளங்களில் யாரேனும் அவதூறுகளைப் பரப்பினால் அதற்கு இணையத்திலேயே சண்டையிட்டுப் பதிலடி கொடுக்கக் கூடாது என்று நீதிபதி அறிவுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் உடனடியாக முறையான புகார் அளிக்க வேண்டும் என்றும், அந்தப் புகாரின் அடிப்படையில் சட்டம் அனுமதிக்கும் வழிகளின் கீழ் முறையாக எப்.ஐ.ஆர் பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுப்பதே சரியான தீர்வு என்றும் நீதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

# மேகதாது அணை திட்டத்திற்காக 8.90 லட்சம் மரங்களை வெட்ட கர்நாடக அரசு திட்டம்



பெங்களூரு நகர குடிநீர் தேவை மற்றும் 400 மெகாவாட் மின்சார உற்பத்திக்காக 64 டிஎம்சி கொள்ளளவில் ரூ.9,000 கோடி மதிப்பீட்டில், மேகதாதுவில் புதிதாக அணையை கட்ட கர்நாடகா தீவிரம் காட்டி வருகிறது. காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்காக, சுமார் 8.90 லட்சம் (9 லட்சம்) மரங்களை வெட்ட கர்நாடக அரசு திட்டமிட்டுள்ள தகவல் தற்போது வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாது வில் ரூ.9 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் 67.14 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட புதிய அணையை கட்ட திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்துக்கு தமிழக அரசு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. மேகேதாது அணை திட்டத்துக்கான முதற்கட்ட திட்ட வரைவு அறிக்கையை கர்நாடக அரசு கடந்த 2018–ம் ஆண்டு மத்திய நீர் ஆணையத்திடம் தாக்கல் செய்தது. இதனை பரிசீலித்த ஆணையம், விரிவான திட்ட அறிக்கையைதாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டது. இதையடுத்து 2019–ம் ஆண்டு விரிவான திட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில் இடம்பெற்றிருந்த சில தகவல்கள் காவிரி நடுவர்மன்றத்தின் தீர்ப்புக்கு முரணாக இருந்ததால், அவற்றை திருத்தி மீண்டும் தாக்கல் செய்யுமாறு மத்திய நீர் ஆணையம் அறிவுறுத்தியது.

இதனைத் தொடர்ந்து கர்நாடக அரசு கடந்த ஏப்ரல் மாதம் திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை மத்திய நீர் ஆணையத்திடம் சமர்ப்பித்தது. ஆனால், அந்த அறிக்கையில் இடம்பெற்றிருந்த தகவல்கள் காவிரி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு முரணாக இருப்ப தாக கூறி, கடந்த ஜூன் 29–ம் தேதி அறிக்கையை கர்நாடக அரசுக்குமத்திய நீர்ஆணையம் திருப்பி அனுப்பியது. இந்த நிலையில், திருப்பி அனுப்பப்பட்ட அறிக்கையில் சில திருத்தங்களை மேற்கொண்ட கர்நாடக அரசு, அதனை மீண்டும் மத்திய நீர் ஆணையத்திடம் சமர்ப்பித்துள்ளது. புதிய அறிக்கையில், மேகதாது அணை அமைக்க வனத்துறைக்கு சொந்தமான 12,500 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்துக்காக அப்பகுதியில் சுமார் 8.90 லட்சம் மரங்கள் வெட்டப்பட வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், புதிதாக கட்டப்படும் அணையில் அதிகபட்சமாக 67.14 டி.எம்.சி. தண்ணீரை சேமிக்க முடியும் என்றும், இதன் மூலம் 400 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதில் 4.5 டி.எம்.சி. தண்ணீர் பெங்களூருவின் குடிநீர் தேவைக்கு பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கர்நாடக நீர்வளத்துறை அமைச்சர் செலுவுராயசாமி கூறுகையில், "மேகதாது அணை திட்டம் தொடர்பான திருத்தப்பட்ட திட்ட அறிக்கையை மீண்டும் சமர்ப்பித்துள்ளோம். மத்திய அரசிடம் விரைவில் அனுமதி பெறப்படும். 2027–ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மேகதாது திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்படும்" என்றார்.

# '611 schools without buildings': Rajasthan govt admits lapses amid CJP 'checks', blames Congress, Gehlot



As the Cockroach Janta Party turned its focus to the condition of government-run schools in Rajasthan, the state government informed the Assembly on Friday that as many as 611 schools are functioning without their own buildings.

Highlighting the lack of proper infrastructure in schools, Rajasthan's BJP government shifted the blame on the previous government led by Congress under chief minister Ashok Gehlot, India Today reported.

Schools without buildings, govt blames Congress

The government, referring to an audit conducted after the Jhalawar school accident, said the report had exposed the poor condition of government schools. The BJP dubbed the poor condition of government schools as the "sin" of the previous Congress government that the current administration was trying to fix. At least seven students died and 28 injured last year in July when the roof a school building in Jhalawar, Rajasthan collapsed while the students were gathering for morning prayers.

The government made the disclosure on the lack of infrastructure in schools in response to a question from Leader of Opposition (LoP) Tika Ram Jully. According to Unified District Information System for Education (UDISE) data for 2025-26 under the Samagra Shiksha Abhiyan cited by India Today, 611 government schools in the state do not have buildings. The numbers that draw a grim picture on Rajasthan's education system comes amid the attack on CJP volunteers who were on their way to inspect a government school in Jaipur's Bagru assembly constituency.

The incident occurred near Rampura Kanwarpura village, where CJP co-convenor Ashutosh Ranka and his team planned to visit a government school to assess its infrastructure and facilities.

"They attacked us and fractured the arm of one of our volunteers," he said, alleging that those involved were workers of the ruling Bharatiya Janata Party (BJP).

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.